


- வாழ்வோம்

காவத்தின் குரல்

எங்கிருந்து வருகிறது இவ்வெறுப்பு?

அண்மையில் நிறைவடைந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், 'மிசா'வில் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருந்த முன்னாள் முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் தாக்கப்பட்டது குறித்து, அருவருப்பான உடல்மொழியோடு தற்போதைய முதல்வர் திரு ஜோசப் விஜய் அவர்கள் பேசிய சர்ச்சைக்குரிய பேச்சு, அனைவரும் அறிந்த ஒன்றே. இதே மாதிரி, தலைவர் கலைஞர் அவர்கள் கருப்புக்கண்ணாடி அணிந்தது குறித்து, அந்நாட்களில் செல்வி ஜெயலலிதா பேசியவையும் பிரபலமானது. தி.மு.க. குறித்தும் தி.மு.க-வின் தலைவர்கள் குறித்தும் இத்தகைய உண்மைக்குப் புறம்பான பழிகளை, அவதூறுகளை, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் அடிக்கடி முன்வைப்பது எதனால் நடக்கிறது? எப்போதும் தி.மு.க.வின்மீதே அடாத பழிகள் சுமத்தப்படுவது ஏன்?

தமிழ்நாட்டிலுள்ள பிற கட்சிகளுக்கும் தி.மு.க.வுக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. தி.மு.க. என்பது சுயமரியாதை இயக்கமாய்த் தோன்றிய பெரியார் இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியாய் வந்த இயக்கம். அரசியல் கட்சியாகச் செயல்பட்ட சமூக இயக்கமாகவே அன்று அறியப்பட்டது. இன்று, பவளவிழாக் கட்சியாக அரசியலில் பெரிய பெரிய சாதனைகளைப் படைத்திருந்தாலும் அக்கட்சி, தனது சமூக இயக்க வேர்களை இழந்துவிடவில்லை.

சமூக இயக்கம் என்பது வெகுமக்களால் மதிக்கப்படாத ஒன்று. சமூக இயக்கச் செயற்பாட்டாளர் குறித்து அண்ணல் அம்பேத்கர், தனது கட்டுரையில் காந்தி, ஜின்னா, ரானடே பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"ஒரு சமூக இயக்கச் செயற்பாட்டாளர், சமூகத்தை எதிர்த்துப் பணி செய்யும்போது, அவரைத் தியாகி எனப் புகழ எவரும் இருக்க மாட்டார்கள். அவருடன் நட்பாகக்கூட யாரும் இருக்கமாட்டார்கள். அவர் வெறுக்கப் படுவார்; புறக்கணிக்கப்படுவார்" என்று அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்ட உண்மைகள், தமிழ்நாட்டில் சமூகப் பணி ஆற்றிய பெரியார் இயக்கத்துக்கும் பொருந்தும். அதன் தொடர்ச்சியாகவும் நீட்சியாகவும் தோன்றிய தி.மு.க.வுக்கும் பொருந்தும்.

அண்ணல் அம்பேத்கர், ஒரு சமூக இயக்கத்திற்குச் சொன்னது அனைத்தும் ஏன் தி.மு.க. என்கிற குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு நடக்கிறது? ஏன் இக்கட்சி குறித்த வெறுப்புணர்வு சமூகத்தில் ஒரு கூட்டத்திடம் இவ்வளவு மண்டிக்கிடக்கிறது?

அதற்குக் காரணம், தி.மு.க. அரசியல் கட்சியாக இருந்தாலும் சமூக இயக்கமாக எப்போதும் பொதுப்புத்திக்கு எதிராகத் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது. இந்த பொதுப்புத்தி குறித்து, இத்தாலிய மார்க்சிய அறிஞரான அந்தோணியோ கிராம்சி, கீழ்க்கண்டவாறு சொல்கிறார்..

"கலாச்சார மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் அதை மறு உற்பத்தி செய்வதற்குமான முதன்மையான கருவியாக வெகுமக்களின் பொதுப்புத்தியே விளங்குகிறது. ஓர் ஆளும் வர்க்கம், உடல்ரீதியான ஆதிக்கத்தின் மூலமாய் அல்ல. மக்கள்திரளின் கலாச்சார மதிப்பீடுகள், நடத்தை, நம்பிக்கைகள் ஆகியவற்றை வடிவமைப்பதின் மூலமே சமுதாயத்தை மேலாதிக்கம் செய்கிறது."

பொதுப்புத்தி என்பது வெகுமக்களின் அறியாமை, வறுமை முதலியவற்றின் துணையோடு, தனக்கேற்றவாறு மக்களின் நடத்தையை மாற்றி, அவர்களை ஆளும் வர்க்கத்துக்கு அடங்கிப்போவதற்குத் தயார்படுத்தி, இணங்கச் செய்கிறது என்பது அவ்வறிஞரின் வாதம். ஒரு கலாச்சார இயக்கம் என்பது எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான வரையறையையும் அவரே தருகிறார்.

"உலகில் பொதுவாகக் காணப்படுகிற பொதுப்புத்தியையும், பழைய கருதுகோள்களையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட எந்த ஒரு கலாச்சார இயக்கமும் கீழ்க்கண்ட வாறுதான் செயல்படும்.



(1) ஒருபோதும் சோர்ந்துவிடாமல் தனது வாதங்களை மீண்டும் மீண்டும் முன் வைக்கும் (வடிவத்தை மாற்றி, வேறு வார்த்தைகளில்கூட); திரும்பத் திரும்பச் சொல்லித்தருவதே, வெகுமக்களின் சிந்தனைப்போக்கை மாற்று வதற்கான சிறந்த கற்பித்தல் முறையாக இருக்கிறது.

(2) மக்களிடையே சதா வளர்ந்துகொண்டே யிருக்கும் பல சமூக அடுக்குகளைச் சேர்ந்தவர் களுடைய அறிவார்ந்த தன்மையை (INTELLECTUAL LEVEL) உயர்த்தும் நோக்கத்தோடு, இடைவிடாமல் பணியாற்றும்; வேறு வார்த்தைகளில் சொன்னால், உருவமற்ற பெருங்கூட்டத்திற்கு ஓர் ஆளுமையை வழங்குவதற்காக, இடைவிடாமல் பணியாற்றும்."

இந்தச் செய்திகள் தரும் புரிதலோடு தமிழ்ச் சமூகத்தில் தி.மு.க-வின் செயல் பாட்டை நாம் மதிப்பிட்டால், நமது பரிசீலனைக்கு வருவன என்னென்ன?

1. "திருப்பரங்குன்றத்தில் நீதித் துறையிலுள்ள சங்கிகளின் துணையோடு, இந்துத்துவ சக்திகள் மத மோதலைத் தூண்டிவிட முயன்றபோது, அவ்வளவு துணிவுடன் அதை எதிர்த்து தி.மு.க. ஏன் நின்றது?"

2. தீபாவளி, விநாயகர் சதுர்த்தி வரும்போதெல்லாம் சுற்றிய நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றத்துக்கு எடுத்துவந்தார். இவர்களின் திட்டம் மிக எளிமை யானது. பக்திமான்கள் போல வேடம் போட்டுக்கொண்டால் போதும். வெகுமக்களின் பொதுப்புத்தியை நிறைவு செய்துவிடலாம்.

ஆனால், தி.மு.க. இவ்வளவு காலமும் எப்படிச் செயல்பட்டு வந்தது; சமத்துவபுரங்களைக் கொண்டு வந்தது; இடஒதுக்கீடுகளை அளிக்கிறது; சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிக்கிறது; சாதி ஒழிப்பிற்கான திட்டங்களை முனைந்து செயல்படுத் துகிறது; அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கியது. அதாவது, தி.மு.க. பொதுப்புத்திக்கு எதிராக மக்களுக்குப் பகுத்தறிவை ஊட்டி, சமூகத்தை மேம்படுத்தவைக்கும் பொறுப்பைத் தனதாக்கிக்கொண்ட கட்சி.

பொதுப்புத்தி சார்ந்து இயங்குகிற கட்சிகளுக்கு இதுவெல்லாம் தேவை யில்லை. சாதி உணர்வைத் தூண்டி விடுவது, மத உணர்வைத் தூண்டி விடுவது; இவை போதும். பொதுப்புத்தியைத் தங்களுக்குச் சாதகமாய் வளைத்துக் கொள்ளலாம். அதோடு, பொருத்தமான சந்தர்ப்பங்களுக்குக் காத்திருந்து வதந்திகளைப் பரப்பிவிட்டு, குண்டர்களின் துணையோடு வன்முறையை ஏவிவிட்டு, அதைச் சாதகமாகப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பறித்துக்கொள்ளலாம். எம்.ஜி.ஆர். மறைவு, ராஜீவ் காந்தி மறைவு நிகழ்ந்த வேளைகளில், தமிழ்நாட்டில் மேற்சொன்ன கும்பல்கள் செய்தவற்றை எண்ணிப்பார்த்தால் இந்த உண்மை புலப்படும். அதேதான், இன்றும் த.வெ.க. ஆட்சியில் அடாத பழிகள் சுமத்தப்படுகின்றன.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் எனில், சாதியவாதிகளும் சனாதனவாதிகளும் எப்போதும் தி.மு.க.விற்கு எதிராகவே இருப்பார்கள். தி.மு.க.விற்கு எதிராக எவ்வளவுக்கு வன்மம் பரப்பப்படுகிறதோ, அதனைத் தங்கள் தலைமேல் சுமந்து பரப்ப, ஒரு கூட்டத்தினர் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள். ஆகவேதான், இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.



சாதாரண மக்களுக்கு, இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். தி.மு.க. ஏன் இவ்வளவு வெறுப்பைத் தாங்க வேண்டும்? தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு வாழ்த்துச் சொன்னால்தான் என்ன? இந்துத்துவவாதி களைக் கொஞ்சம் அனுசரித்து நடந்தால்தான் என்ன?

தி.மு.க.வால் அது முடியாது என்பதுதான் பதில். தி.மு.க.வின் அடிநாதமான சமத்துவம், பகுத்தறிவு போன்ற கொள்கைகளுக்கு எதிராகப் போக அவர்களால் எந்தக் காலத்திலும் முடியாது. பதிலுக்கு, அத்தகைய வர்களிடம் இப்படிக் கேட்டுப்பாருங்கள். பொதுப்புத்திக்கு எதிரான கட்சியான தி.மு.க. இல்லாமல் போயிருந்தால், தமிழ்நாட் டிற்கு என்ன ஆகியிருக்கும்? இக்கேள்விக்கு விடை சொல்ல, நாம் தமிழ்நாட்டுக்கு வெளியே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டுக்கு வெளியே, இந்தியா முழுவதும் என்ன நடக்கிறது? இன்று இந்தியா முழுவதும் மக்கள் மதரீதியாகப் பிளவுபட்டு, அமைதியைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள். இலங்கையை எடுத்துக்கொண் டாலும்கூட, தமிழர் என்ற அடையாளத்துக்கு வெளியே தமிழ் பேசும் இஸ்லாமியர் நிறுத்தப்பட்டுள்ளார்கள்!

■

ம.மதிவண்ணன் ■

பார்ப்பனர்களும் அவர்களது அடியாட்களும், தி.மு.க. தலைவரிடமிருந்து வாழ்த்துச் செய்தியைக் கேட்டு மிரட்டுவதை ஏன் வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள்?

தமிழ்நாட்டில், அரசியலில் ஈடுபடும் பிற கட்சிகளுக்கெல்லாம் இந்த நிலை வருவதில்லையே ஏன்?

ஏனென்றால், மேற்கண்ட மேற்கோள்களில் நாம் கண்டதுபோன்ற ஒரு சமூக இயக்கமாகவும் கலாச்சார இயக்கமாகவும் தி.மு.க. செயல்படுகிறது என்பதுதான்.

■ பொதுப்புத்திக்கு எதிராக...

ஜெயலலிதா, கோயில் கோயிலாகச் சென்று வழிபட்டார். அவரது அமைச்சர்கள் மண்சோறு சாப்பிடுவார்கள். மொட்டை அடித்துக்கொள் வார்கள். அந்த வழியில் இன்று ஆட்சிக்கு வந்திருக்கிற திரு விஜய்யும் மாதா கோயிலுக்கு முட்டி போட்டுக்கொண்டு போகிறார். பல்வேறு ஆலயங்களுக்கும் போகிறார். அவரது அமைச்சர் ஒருவர், வேளாண் நிதிநிலை அறிக்கையையே திருப்பதியில் வைத்து வழிபட்டார். இன்னொருவர், ஜெபமாலை

ஃப்ளாஷ்பேக்



தலைவர் வாழ்த்திய தருணம்!

1997-ஆம் ஆண்டு, சைதாப்பேட்டையில் நடைபெற்ற 'பட்ஜெட்' விளக்கப் பொதுக்கூட்டத்தில்.. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்த உன்னதமான தருணம். இளைஞர் அணியில் இணைந்து பணியாற்றத் தொடங்கிய அந்தக் காலகட்டத்தில், தளபதியை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எளிய தொண்டனையும் அன்போடு அரவணைக்கும் குணம் கொண்ட தலைவர், என் தோள் தொட்டு வாழ்த்தியது என்றென்றும் மறக்க முடியாதது.



சைதை சாதிக்

– சைதை சாதிக்,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

"இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதி வாக்காளர்களே, துரோகிகளுக்கு வாக்களிக்காதீர்கள்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார், எழுத்தாளர் ஷாஜகான். அவரது முகநூல் பதிவிலிருந்து...

நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருந்தாலும் சரி, உங்கள் தொகுதியில், கடந்த தேர்தலின்போது நீங்கள் உழைத்தீர்கள்; செலவு செய்தீர்கள்; வேலையைக் கெடுத்துக்கொண்டுபோய் வாக்களித்தீர்கள். அத்தனையும் வீணாய்ப்போயிற்று துரோகிகள், மரகதம் மற்றும் சத்தியபாமா ஆகியோரின் செயல்களால்.

தேர்தலுக்கு வேட்பாளர்கள் செலவுசெய்த தொகை ஒரு பக்கம் இருக்கட்டும். தேர்தலுக்காக அரசாங்கமும் செலவுசெய்கிறது. வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வாக்குச்சாவடி அமைத்தல், வாக்கு இயந்திரம், பணியாளர் ஊதியம், பாதுகாப்பு, போலீஸ், போக்குவரத்து என ஒவ்வொரு தொகுதிக்கும் 50 கோடி ரூபாய் செலவு செய்தது என்று வைத்துக்கொள்வோம். அது யாருடைய பணம்? நம்முடைய வரிப்பணம். உங்களுடைய பணம்; உங்கள் உழைப்பிலிருந்து அரசுக்குப் போய்ச்சேர்ந்த வரிப்பணம். அரசு செலவுசெய்த ஒவ்வொரு ரூபாயிலும் உங்கள் வியர்வையும் ரத்தமும் இருக்கிறது.

இடைத்தேர்தலில் பாழாகும் வரிப்பணம்!

நீங்கள் தேர்வுசெய்த சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது சுயநலத்துக்காகச் செய்த மாபெரும் துரோகம், உங்கள் உழைப்பை ஒரு நொடியில் வீணாக்கிவிட்டது. மீண்டும் உங்களை உழைக்கவைக்கிறது; மீண்டும் உங்களுக்குச் செலவுவைக்கிறது. அது மட்டுமல்ல, த.வெ.க. தலைவர்கள், த.வெ.க. ஆதரவாளர்களுக்கும் துரோகம் செய்திருக்கிறார்கள். த.வெ.க. ஆதரவாளர்கள் யாரை எதிர்த்து வேலை செய்தார்களோ... இப்போது அவர்களையே தலையில் கட்டியுள்ளனர். உழைத்து வேட்பாளர் ஆகித் தோற்றவர்களைவிட, மாற்றுக் கட்சியிலிருந்து நேற்று ஓடி வந்தவரை எம்.எல்.ஏ. ஆக்கக் கடுமையாக உழைக்கிறார்கள் த.வெ.க. தலைவர்கள்.

அ.தி.மு.க.விலிருந்து நேற்று ஓடிவந்த துரோகிக்காக, இரவெல்லாம் ஓடி ஓடிப் பிரச்சாரம் செய்கிறார்கள். உங்கள் தலைவருக்குத் தேவை தொண்டர்கள் அல்ல. துரோகிகள்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆகவே வாக்காளர்களே, நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் சரி, த.வெ.க.வின் விசில் சின்னத்துக்கு மட்டும் வாக்களித்துவிடாதீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900